மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 1 லட்சத்து 14 ஆயிரம் கன அடியாக குறைந்தது

மேட்டூர், ஆக.13–

கர்நாடக அணைகளில் இருந்து திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு குறைந்ததால் மேட்டூர் அணைக்கு இன்று காலை நீர்வரத்து 1 லட்சத்து 14 ஆயிரம் கன அடியாக குறைந்தது.

கர்நாடகா மற்றும் கேரளாவில் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த கன மழையால் கர்நாடகாவில் உள்ள கபினி மற்றும் கிருஷ்ணசாகர் அணைகள் நிரம்பின. இந்த 2 அணைகளில் இருந்தும் நேற்று காலை 1 லட்சத்து 40 ஆயிரம் கன அடி உபரி நீர் காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டது. இந்த தண்ணீர் ஒகேனக்கலை கடந்து நேராக மேட்டூர் அணைக்கு வருகிறது.

இதனால் மேட்டூர் அணைக்கு நேற்று காலை 1 லட்சத்து 33 ஆயிரத்து 941 கன அடி தண்ணீர் வந்ததால் அணையில் இருந்து 1 லட்சத்து 35 ஆயிரம் கன அடி தண்ணீர் காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டது.

இதற்கிடையே கர்நாடக அணைகளுக்கு நீர்வரத்து குறைந்ததால் நேற்று மாலை முதல் தண்ணீர் திறப்பு படிப்படியாக குறைக்கப்பட்டது. கிருஷ்ணராஜசாகர் அணைக்கு இன்று காலை 27 ஆயிரத்து 528 கன அடி தண்ணீர் வந்த நிலையில் அணையில் இருந்து 26 ஆயிரத்து 425 கன அடி தண்ணீர் காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டது.

கபினி அணைக்கு நீர்வரத்து 45 ஆயிரத்து 750 கன அடியாக இருந்ததால் அணையில் இருந்து 40 ஆயிரம் கன அடி தண்ணீர் காவிரியில் திறந்து விடப்பட்டுள்ளது. தண்ணீர் திறப்பு குறைக்கப்பட்டதால் இனி வரும் நாட்களில் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக குறைய வாய்ப்புள்ளது.

மேட்டூர் அணைக்கு இன்று காலை நீர்வரத்து 1 லட்சத்து 14 ஆயிரம் கன அடியாக இருந்தது. 16 கண் பாலம் வழியாக 89 ஆயிரம் கன அடியும், நீர் மின் நிலையம் வழியாக 23 ஆயிரம் கன அடி என மொத்தம் 1 லட்சத்து 12 ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

அணையின் நீர்மட்டம் இன்று காலை 120.30 அடியாக இருந்தது. மேட்டூர் அணையில் இருந்து 1 லட்சம் கன அடிக்கும் அதிகமாக தண்ணீர் திறந்து விடப்படுவதால் மேட்டூர் காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்டம் காவிரி கரையோர பகுதிகளில் 50க்கும் மேற்பட்ட வீடுகளை சூழ்ந்தது. இந்த வீடுகளில் வசித்தவர்கள் தொடர்ந்து பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேலும் காவிரி கரையோர பகுதிகளில் வருவாய் துறை அதிகாரிகள் தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள்.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நேற்று காலை 1 லட்சத்து 22 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்த நிலையில் இன்று காலை 1 லட்சத்து 19 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அனைத்து அருவிகளையும் மூழ்கடித்த படி வெள்ளம் செல்கிறது. அருவிகளில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் தொடர்ந்து தடை விதிக்கப்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகள் கரையில் நின்று வேடிக்கை பார்த்து செல்கிறார்கள்.

திருச்சி, கரூர் காவிரி ஆற்றில் வெள்ளம்: வீடு, வயல்களுக்குள் தண்ணீர் புகுந்தது

கரூர், ஆக.13–

காவிரி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக கரூர், மாயனூர் மற்றும் தவுட்டுப்பாளையம் பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் வயல்களுக்குள் தண்ணீர் புகுந்தது.

மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்பட்ட கூடுதல் தண்ணீர் மூலம் கரூர் மாவட்டம் மாயனூரில் இரு கரைகளையும் தொட்டபடி வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. இதன் காரணமாக மாயனூர் அணைக்கு மேற்கு பகுதியில் உள்ள மேல மாயனூர், கீழமாயனூர் உள்ளிட்ட பகுதிகளில் நாவல் மரங்கள், கிணறுகள், ஆழ் குழாய் மோட்டார்கள் தண்ணீரில் மூழ்கின.

கட்டளை பகுதியில் உள்ள தரிசு வயல்களிலும், மேல மாயனூர் பகுதியில் உள்ள வாழைத்தோப்பு மற்றும் நெல் சாகுபடிக்கு தயார் செய்யப்பட்ட நிலங்களிலும் தண்ணீர் புகுந்தது.

திருச்சி கொள்ளிடம் ஆற்றில் திறக்கப்படும் தண்ணீரின் அளவு வரும் நாட்களில் அதிகரிக்கப்படும் என்பதால் கொள்ளிடம் கரையோரத்தில் துணிகளை துவைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள சலவை தொழிலாளர்கள், பொதுமக்கள் யாரும் ஆற்றங்கரை பகுதிக்கு செல்ல வேண்டாம் எனவும், பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

வெள்ளம் காரணமாக முசிறி, தொட்டியம் பகுதி காவிரி ஆற்றில் பொதுமக்கள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு நடவடிக்கையாக கரூர், திருச்சி மாவட்டத்தில் காவிரி கரையோர பகுதியில் தண்டோரா மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

கரூர் மாவட்டம் வேலாயுதம்பாளையம் பகுதியில் நொய்யல் முதல் திருமுக்கூடலூர் வரை காவிரியின் இரு கரைகளையும் தொட்டுக் கொண்டு வெள்ள நீர் செல்கிறது. இதில் தவுட்டுப்பாளையத்தில் காவிரி கரையோரம் உள்ள வீரமணி என்பவரது வீட்டையும், அங்குள்ள விவசாய நிலங்களிலும் வெள்ளநீர் புகுந்தது. இதனால் வீரமணி தனது குடும்பத்துடன் அருகில் உள்ள உறவினர் வீட்டிற்கு சென்று தஞ்சம் அடைந்தார்.

இதையடுத்து மண்மங்கலம் தாசில்தார் கற்பகம், நொய்யல், சேமங்கி, தவுட்டுப்பாளையம், புகளூர் உட்பட காவிரி கரையோர பகுதிகளுக்கு சென்று பார்வையிட்டார். பின்னர் அங்கு கரையோரம் வசிக்கும் பொதுமக்களிடம் காவிரி ஆற்றில் அதிகளவு தண்ணீர் வருவதால் மேடான பகுதிகளுக்கு செல்லுமாறும், குழந்தைகளை காவிரி கரையில் விளையாட விடவேண்டாம் என்றும் பாதுகாப்பாக இருக்குமாறும் எச்சரிக்கை விடுத்தார்.

காவிரி வெள்ளம்

நிவாரண முகாம்களுக்கு சென்று குறை கேட்டார் நாமக்கல் கலெக்டர் ஆசியா மரியம்

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் நகராட்சி காவிரி ஆற்றின் கரையோர தாழ்வான பகுதிகளில் தண்ணீர் புகுந்ததையடுத்து அந்த பகுதிகளில் உள்ள வீடுகளில் வசித்த பொதுமக்கள் அரசு நிவாரண முகாம்களில் தங்க வைகப்பட்டுள்ளனர். அவர்கள் மாவட்ட கலெக்டர் ஆசியா மரியம் நேரில் சந்தித்து குறைகளை கேட்டறிந்தார்.

நாமக்கல், ஆக.13–

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் காவிரி ஆற்றின் கரையோர தாழ்வான பகுதிகளில் குடியிருந்தவர்கள் பாதுகாப்பாக நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கலெக்டர் ஆசியா மரியம், முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை நேரில் பார்வையிட்டு குறைகளை கேட்டறிந்தார்.

மேட்டூர் அணை இரண்டாம் முறையாக நிரம்பி இருப்பதால் அணையில் இருந்து அதிக அளவில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் காவிரி ஆற்றுப் பகுதிகளில் நீரின் அளவு உயர்ந்து கரையோரப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள் நீர் புகுந்துள்ளது. காவிரி ஆற்றில் அதிக அளவில் நீர் வந்து கொண்டிருப்பதால் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் கரையோர பகுதிகளில் உள்ள பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு கடந்த 4 நாட்களாக அறிவுறுத்தப்பட்டு வருகின்றது.

மேலும் கரையோரப் பகுதியில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் தண்டோரா போட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு வருகின்றது. குமாரபாளையம் இந்திரா நகர், கலைமகள் வீதியில் உள்ள வீடுகளில் தண்ணீர் புகுந்ததால் இப்பகுதியில் 42 குடும்பங்களை சேர்ந்த பொதுமக்கள் குமாரபாளையம் ஜே.கே.கே. நடராஜா நகராட்சி திருமண மண்டபத்திற்கு வருவாய்த்துறையின் மூலம் அழைத்துச் செல்லப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் குமாரபாளையம் இந்திராநகர், மணிமேகலை தெருவில் வசித்து வரும் 36 குடும்பங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு புத்தர் வீதியில் செயல்பட்டு வரும் நகராட்சி துவக்கப் பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். குமாரபாளையத்தில் ஜே.கே.கே. நடராஜா நகராட்சி திருமண மண்டபத்தில் 51 ஆண்களும், 80 பெண்களும், 19 குழந்தைகளும் சேர்த்து மொத்தம் 150 நபர்களும், புத்தர் தெரு நகராட்சி துவக்கபள்ளியில் 52 ஆண்களும், 65 பெண்களும், 19 குழந்தைகளும் சேர்த்து மொத்தம் 136 நபர்களும் தங்க வைக்கப்பட்டள்ளனர். அரசின் சார்பில் இவர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது.

கலெக்டர் நேரில் சென்றார்

கலெக்டர் ஆசியா மரியம் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை நேரில் பார்வையிட்டு குறைகளை கேட்டறிந்தார். இந்திரா நகர் கலைமகள் வீதி மற்றும் மணிமேகலை தெரு ஆகிய பகுதிகளில் உள்ள தெருக்களில் வீடுகளை பார்வையிட்டார்.

பின்னர் மாவட்ட கலெக்டர் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்ததாவது:–

மேட்டூர் அணையானது இரண்டாவது முறையாக முழுகொள்ளளவை அடைந்து, நிரம்பியுள்ளது. தற்போது மேட்டூர் அணையிலிருந்து 1 லட்சத்து 30 ஆயிரம் கனஅடி தண்ணீரானது திறந்து விடப்பட்டுள்ளது. அதன்காரணமாக நாமக்கல் மாவட்டம் சமயசங்கிலி அக்ரஹாரம் பகுதிக்கு 1 லட்சத்து 30 ஆயிரம் கனஅடி தண்ணீரானது வந்து கொண்டுள்ளது. குமாரபாளையத்தில் இந்திராநகர் கலைமகள் வீதி மற்றும் மணிமேகலை தெரு ஆகிய இரண்டு தெருக்களில் தண்ணீர் முழுமையாக புகுந்துள்ளது.

கலைமகள் வீதியில் 42 வீடுகளிலும், மணிமேகலை தெருவில் 36 வீடுகளிலும் தண்ணீர் புகுந்துள்ளது. மணிமேகலை தெருவில் 36 வீடுகளில் வசித்த பொதுமக்களை புத்தர் தெருவில் உள்ள நகராட்சி துவக்க பள்ளியிலும், கலைமகள் தெருவில் நீர் புகுந்த 42 வீடுகளில் வசித்த பொதுமக்களை ஜெ.கே.கே. நடராஜா நகராட்சி திருமண மண்டபத்திலும் தங்க வைத்துள்ளோம். மொத்தம் 286 பொதுமக்கள் 11–ந் தேதி இரவு முதல் அரசு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

எச்சரிக்கை பதாகைகள்

தண்ணீர் புகுந்த தெருக்களில் யாரும் செல்லக்கூடாது என்று காவல்துறை, வருவாய்த்துறை மற்றும் நகராட்சியின் மூலமாக எச்சரிக்கை பதாகைகள் வைக்கப்பட்டு உள்ளதோடு, ஒலிபெருக்கி மூலம் எச்சரிக்கை தொடர்ந்து தெரிவிக்கப்பட்டு வருகின்றது. மேட்டூர் அணையில் இருந்து எவ்வளவு தண்ணீர் விடுவிக்கப்பட்டு வருகின்றது என்பது குறித்து மாவட்ட நிர்வாகத்திற்கு 2 மணி நேரத்திற்கு ஒருமுறை தகவல் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

அதற்கேற்றாற்போல் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நமது மாவட்டத்தில் ஜேடர்பாளையம் அணைக்கட்டு வரை 1 லட்சத்து 25 ஆயிரம் கனஅடி தண்ணீர் சென்று கொண்டுள்ளது. மோகனூர் பகுதியில் ஆற்றின் அகலம் அதிகமாக இருப்பதாலும், கரையோரங்களில் அப்பகுதிகளில் பொதுமக்கள் வசிக்காததாலும் பாதிப்பு இல்லை.

குமாரபாளையம் பாதிப்பு

மாவட்டத்தில் குமாரபாளையம் பகுதியில் மட்டுமே பாதிப்பு உள்ளது. நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு உணவு, மருத்துவ வசதி ஆகியவை செய்யப்பட்டுள்ளன. மாவட்டத்தின் பிறபகுதிகளில் பொதுமக்கள் ஆற்றின் கரையோரங்களுக்கு செல்லவேண்டாம் என்று தொடர்ந்து எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வுகளின்போது திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் வெ.பாஸ்கரன், குமாரபாளையம் வட்டாட்சியர் ரகுநாதன், நகராட்சி ஆணையாளர் மகேஸ்வரி மற்றும் வருவாய்த் துறை, நகராட்சி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பிரிந்த தம்பதியை சேர்த்து வைத்த சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி

பெங்களூரு, ஆக.13–

கர்நாடகாவில் நடைபெற்ற சிறப்பு மக்கள் நீதிமன்றத்தில், பிரிந்த தம்பதியை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தீபஸ் மிஸ்ரா சேர்த்து வைத்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கர்நாடக மாநிலம் ஹூப்ளியில் புதிய கோர்ட்டு வளாக கட்டிடம் திறப்பு விழா நேற்று நடந்தது. அதில் சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா கலந்து கொண்டு கோர்ட்டு கட்டிட வளாகத்தை திறந்து வைத்தார். பின்னர் நடந்த சிறப்பு மக்கள் கோர்ட்டு ('ஸ்பெசல் லோக் அதாலத்') விசாரணையில் பங்கேற்றார். அப்போது அவரிடம் ஒரு தம்பதியின் விவாகரத்து வழக்கு விசாரணைக்கு வந்தது.

அவர்களுக்கு 4 குழந்தைகள் உள்ளனர். அவர்களிடம் பேசிய பிறகு விவாகரத்துக்கு விண்ணப்பித்த கணவன், மனைவியை அழைத்து பேசினார். அவர்களின் மனதை மாற்றி இருவரையும் மீண்டும் ஒன்று சேர்த்து வைத்தார்.

இந்த தம்பதிக்கு கடந்த 2000 ம் ஆண்டு திருமணம் நடந்தது. இருவரும் மகிழ்ச்சியாக குடும்பம் நடத்தி 4 குழந்தைகளை பெற்றனர். கருத்து வேறுபாடு காரணமாக விவாகரத்து கேட்டு 2015ம் ஆண்டு குடும்ப நலகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர்.

இவர்களின் வழக்கு லோக் அதாலத் எனப்படும் மக்கள் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டது. கடந்த 2 ஆண்டுகளாக இந்த வழக்கு கிடப்பில் போடப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்று நடந்த சிறப்பு மக்கள் கோர்ட்டில் சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது தம்பதியையும், அவர்களது குழந்தைகளையும் தனித்தனியே அழைத்து பேசிய நீதிபதி தீபக் மிஸ்ரா குடும்பத்தின் மதிப்பு என்ன என்பது குறித்து அவர்களிடம் விளக்கினார்.

கணவன்–மனைவி விவாகரத்து செய்வதால் குழந்தைகளின் எதிர்காலம் கடும் பாதிப்புக்குள்ளாகும் என்பதை எடுத்துரைத்தார். குழந்தைகள் நலனுக்காக அவர்கள் இருவரும் மீண்டும் இணைந்து வாழ வேண்டும் என்று அறிவுறுத்தினார். அதை ஏற்றுக் கொண்ட தம்பதி தங்களது விவாகரத்து வழக்கை வாபஸ் பெற்று குழந்தைகளுடன் மீண்டும் இணைந்து வாழ்வதாக உறுதி அளித்தனர். பின்னர் அவருக்கு நன்றி தெரிவித்து விட்டு அங்கிருந்து புறப்பட்டனர்.

இதுபோன்று 5 வழக்குகளை தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா வெற்றிகரமாக முடித்து வைத்தார். விவகாரத்து குறித்து அவர் கூறும் போது, 'இத்தகைய வழக்குகள் குடும்பத்தை பலவீனப்படுத்துகின்றன. இதன் தாக்கம் சமுதாயத்திலும் விளைவுகளை ஏற்படுத்துகிறது. பிரிந்து வாழும் தம்பதிகள் குழந்தைகளின் எதிர்கால வாழ்வை கருத்தில் கொண்டு மீண்டும் இணைய வேண்டும் என கருத்து தெரிவித்தார்.

விஜயா வங்கி

(இந்திய அரசு நிறுவனம்)

சௌகார்பேட்டை கிளை: எண்.74, AIV டவர்ஸ்,
தேவராஜ முதலி தெரு, சௌகார்பேட்டை, சென்னை-03
Ph: 044 - 25352342

நகை கடன் ஏல அறிவிப்பு

எங்களது வங்கியில் நகைக்கடன் பெற்றுள்ள கீழ்க்கண்ட நபர்களுக்கு எதிரே குறிக்கப்பட்டுள்ள நகைக்கடன் தொகை, தவணை கடந்து நெடுநாட்களாகியும் கடன் தொகையினை செலுத்தி நகைகளை திரும்பப்பெறவில்லை. ஏல நோட்டீஸ்கள் கீழ்க்கண்ட நபரின் முகவரிக்கு பதிவுத்தபாலில் வங்கி அனுப்பியது

எனவே இந்த விளம்பரம் கண்டவுடன் அசல், வட்டி மற்றும் இதர செலவுகளையும் சேர்த்து **20.08.2018** தேதிக்குள்ளாக திருப்பிவிட வேண்டும். **தவறினால் கடனிற்கு ஈடாக வைக்கப்பட்டுள்ள நகைகளை கடன் பெற்றவரின் செலவிலேயே 23.08.2018 தேதி காலை 11.00 மணியளவில் வங்கி அலுவலகத்தில் வைத்து கிளை மேலாளர் அவர்களால் பொதுமக்கள் முன்னிலையில் பகிரங்க ஏலம் விடப்படும்** அல்லது நிர்வாகத்தின் சௌகரியம் போல் மறு ஏல அறிவிப்பு ஏதுமின்றி வேறு தேதிகளில் ஏலம் விடப்படும் என்றும் இதன் வாயிலாக அறிவிக்கப்படுகிறது. இந்த நடவடிக்கையை மாற்றவோ, ஒத்தி வைக்கவோ கிளை மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். ஏல நிபந்தனைகளை வங்கியின் அறிவிப்பு பலகையில் காணலாம்.

கடன் எண்	கடன்தாரர் பெயர்	கடன் தேதி	கடன் தொகை	31.07.2018 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	நகையின் எடை கிராமில் (Gross Weight)
305507051000551	பீம் சிங் சவுத்	06.04.2016	₹ 55,000/-	₹ 72,158/-	31.10

தேதி : 13.08.2018
இடம் : சென்னை

மேலாளர்
விஜயா வங்கி

சம்பந்தம் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: தபால் பெட்டி எண். 1 காமராஜ் நகர் காலனி, சேலம் 636 014
Phone 0427 2240790; Fax : 0427 2240169 Web site : www.sambandam.com
(CIN : L17111TZ1973PLC000675) e-mail : corporate@sambandam.com

30 ஜூன், 2018ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத (தனியான) நிதிநிலை முடிவுகள் அறிக்கை சுருக்கம்

ரூ. லட்சத்தில்

வ. எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஆண்டு
		30.06.2018 தணிக்கை செய்யாதது	31.03.2018 தணிக்கை செய்தது	30.06.2017 தணிக்கை செய்யாதது	31.03.2018 தணிக்கை செய்தது
1.	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	5,026.14	5,674.07	5,322.69	19,308.04
2.	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் முன்)	186.35	203.53	222.73	627.06
3.	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்)	186.35	(79.48)	222.73	344.05
4.	தொடரும் செயல்பாடுகளிலிருந்து வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்)	137.47	(50.11)	158.24	344.94
5.	கைவிடப்பட்ட செயல்பாடுகளிலிருந்து வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்)	---	---	---	---
6.	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் /(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது)	138.14	(52.77)	159.27	346.69
7.	ஈக்விடி பங்கு மூலதனம்	427.55	427.55	427.55	427.55
8.	கடந்த ஆண்டு தணிக்கையான நிதிநிலை அறிக்கையில் உள்ளபடி நிகர மதிப்பு	---	---	---	8997.54
9.	ஒரு பங்கு சம்பாத்தியம் (தொடரும் செயல்பாடுகளுக்காக) (ஒன்று ரூ.10–) (வருடாந்திரமல்ல) (ஏ) அடிப்படை (பி) டைலூட்டட்	 3.26 3.26	 (1.18) (1.18)	 3.71 3.71	 8.09 8.09
10.	ஒரு பங்கு சம்பாத்தியம் (தொடரும் மற்றும் கைவிடப்பட்ட செயல்பாடுகளுக்காக) (ஒன்று ரூ.10–) (வருடாந்திரமல்ல) (ஏ) அடிப்படை (பி) டைலூட்டட்	 3.26 3.26	 (1.18) (1.18)	 3.71 3.71	 8.09 8.09

குறிப்பு:

SEBI (பட்டியலிடுதல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தணிக்கையாகாத நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. தணிக்கையாகாத நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் கம்பெனியின் இணையதளம் மற்றும் பம்பாய் ஸ்டாக் எக்சேஞ் லிமிடெட் இணையதளம் www.sambandam.com மற்றும் www.bseindia.comல் உள்ளது.

சம்பந்தம் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்டுக்காக

இடம் : சேலம்
தேதி : 11/08/2018

S. தேவராஜன்
சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குனர்

பசு பாதுகாப்பு விவகாரம்

பாரதீய ஜனதாவில் இருந்து தெலுங்கானா எம்எல்ஏ விலகல்

ஐதராபாத், ஆக.13–

தெலுங்கானாவில் பசு பாதுகாப்புக்கு ஆதரவு அளிக்காததால் பா.ஜ.க. எம்எல்ஏ ஒருவர் கட்சியில் இருந்து விலகியிருப்பது சலசலப்பை உருவாக்கி உள்ளது.

தெலுங்கானா மாநிலம் கோஷமகால் சட்டமன்றத் தொகுதியின் பா.ஜ.க. உறுப்பினர் ராஜா சிங் லோத் சமூக வலைத்தளத்தில் ஒரு வீடியோ பதிவேற்றம் செய்துள்ளார். அதில், பசு பாதுகாப்புக்கு கட்சி தலைமை உரிய ஆதரவு தராததால் கட்சியில் இருந்து வெளியேறியிருப்பதாகவும், மாநில பா.ஜ.க. தலைவர் லட்சுமணனிடம் ராஜினாமா கடிதத்தை அளித்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

என்னைப் பொருத்தவரை இந்து தர்மம் மற்றும் பசு பாதுகாப்பு ஆகியவற்றுக்கே முன்னுரிமை கொடுப்பேன். அதன்பிறகுதான் அரசியல். பசு பாதுகாப்பிற்பிற்காக இப்போது பா.ஜ.க.வில் இருந்து விலகியிருக்கிறேன்.

பசுபாதுகாப்பு தொடர்பாக சட்டமன்றத்தில் பலமுறை பிரச்சினை எழுப்பினேன். ஆனால் கட்சி எனக்கு எந்த ஆதரவும் தரவில்லை. இனி நானும், எனது குழுவினரும் (பசு பாதுகாவலர்கள்) தெருவில் இறங்கி போராடுவோம். பசு பாதுகாப்பிற்காக எதையும் செய்வோம்' என்றும் ராஜா சிங் லோத் கூறியுள்ளார்.

பா.ஜ.க.வுக்கு மேற்கொண்டு எந்த தொந்தரவும் கொடுக்க விரும்பாததால், ராஜினாமா செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.: MS-C-OT-11-வீல் போக்குவரத்து-2018-19 தேதி : 13.08.2018

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும் துணை தலைமை இயந்திரவியல் பொறியாளர் / உற்பத்தி, ஐசிஎப், சென்னை - 38 அவர்கள், பின்வரும் பணிக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார்.

பணி பற்றிய விவரம்	LHB **வீல் செட்டுகளை ஷெல் கோட்டத்திலிருந்து** LHB **கோட்டத்திற்கு போக்குவரத்து செய்வதற்கான பணிகள் ஒப்பந்தம்**
தோராய மதிப்பு (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட)	₹ **15,56,100/-**
பிணை வைப்பு தொகை	₹ **31,130/-**
ஒப்பந்தப்புள்ளி படிவக் கட்டணம்	₹ **2,000/-** (திருப்பித் தரப்பட மாட்டாது)
ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் தேதியும் நேரமும்	**11-09-2018** அன்று **14.45** மணி

விலைப்புள்ளி சமர்ப்பிக்கப்பட வேண்டிய இணையதளம் : **www.ireps.gov.in** ஒப்பந்தப்புள்ளியாளர்கள், ஏதேனும் சேர்த்தல் /திருத்தம் வெளியிடப்பட்டுள்ளதா என்பதை இணையதளத்தை அவ்வப்போது பார்த்து அறிந்து கொள்ளும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வாடிக்கையாளர்களுக்கு இன்முகத்துடன் இனிய சேவை

பைவ் கோர் எக்சிம் லிமிடெட்

(முன்னர் அரும் சாப்ட் சிஸ்டம்ஸ் லிமிடெட்)
L32200TN1994PLCO26958
பதிவு அலுவலகம்: சிட்டி சென்டர் பிளாசா, 3வது தளம், அறை எண். 7/48, அண்ணா சாலை, சென்னை–600 002.
Tel: (91)-7042292838, Email: manager.roc@5core.in, Website: www.fivecoreexim.com

(செபி (எல்ஓடிஆர்) கட்டுப்பாடுகள் 2015, கட்டுப்பாடு 52(8) மற்றும் கட்டுப்பாடு 52(4))

30.06.2018ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத தனியான நிதிநிலை முடிவுகள் அறிக்கை

வ. எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஆண்டு
		30.06.2018 (தணிக்கை யாகாதது)	31.03.2018 (தணிக்கை யாகாதது)	30.06.2017 (தணிக்கை யாகாதது)	31.03.2018 (தணிக்கை யானது)
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	265.66	10.02	26.56	419.56
2.	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	5.24	7.44	0.22	11.25
3.	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின் #)	5.24	7.44	0.22	11.25
4.	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின் #)	3.88	145.02	0.22	148.83
5.	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது)	3.87	145.25	0.13	148.78
6.	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம்				1302.00
7.	ரிசர்வுகள் (மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக)				(552.71)
8.	பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (ஒன்று ரூ./–) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) 1. அடிப்படை 2. பலம் இழந்த ஒரு பங்கு	 0.01 0.01	 0.22 0.22	 0.00 0.00	 0.23 0.23

குறிப்பு:

1. செபி (பட்டியலிடுதல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015, கட்டுப்பாடு 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சுகள் மற்றும் நிறுவன இணையதளங்களில் உள்ளது.
2. கணக்கு கொள்கைகளில் மாற்றம் ஏற்பட்டதால் நிகர லாபம்/நஷ்டம், மொத்த விரிவான வருமானம் அல்லது இதர தொடர்புடைய நிதி அயிட்டங்களில் தாக்கம் ஏற்பட்டால் அது குறித்து அடிக்குறிப்பின் மூலம் வெளியிடப்படும்.
3. # –எங்கு பொருந்துகிறதோ அங்கு இன்ட் ஏஸ் விதிகள்/ஏஎஸ் விதிகளின்படி லாப நஷ்ட அறிக்கையில் விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் சரி செய்யப்பட்டுள்ளது.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி

தேதி: ஆகஸ்ட் 11, 2018
இடம்: புதுடெல்லி

ஒப்பம்/– சுரிந்தர் கவுர் கல்ரா
(நிர்வாக இயக்குனர்)
DIN: 00177037

TVS SRICHAKRA LIMITED
TVS BUILDING, 7 WEST VELI STREET, MADURAI – 625 001.

NOTICE OF LOSS OF SHARE CERTIFICATE(S)

Notice is hereby given that the following Share Certificate(s) issued by the Company is/are stated to have been lost/misplaced (with or without transfer deed) and the registered/bonafide holder(s) thereof has/have applied to the Company for the issue of Duplicate Share Certificate(s).

FOLIO NO.	NAME OF THE SHARE HOLDER	CERT_NO	FR_DIST NO	TO_DIST NO	SHARES
25913	MISS P K M TAMILARASI	138977	6867088	6867137	50
310	MRS P K M TAMILARASI	138880	6863484	6863533	50
310	MRS P K M TAMILARASI	138881	6863534	6863568	35

The public is hereby warned against purchasing or dealing in any way with the above Share Certificate(s) . Any person who has any claim in respect of the said Share Certificate(s) should lodge such claim with the Company at its registered office at the address given above within 15 days of publication of this notice, after which no claim will be entertained and the Company will proceed to issue Duplicate Share Certificate(s) in favour of the registered holder(s).

Place: CHENNAI
Date : 13/08/2018

TVS SRICHAKRA LIMITED
P.Srinivasan
SECRETARY